### இசாயாஸ் ஆகமம் 9:6

ஏனெனில், ஒரு பாலன் நமக்குப் பிறந்தார், சுதன் நமக்கு அளிக்கப் பட்டார்; அவர் மீது தோள்மீது தமது அரசாட்சியது அடையாளத்தைக் கொண்டிருப்பார்; அவர் அதிசயர் எனவும், புத்திப் பிரபோதகர் எனவும், தேவர் எனவும், ஞுகத்துவர் எனவும், எதிர்காலப் பிதாவெனவும், சமாதானப் பிரபு எனவும் அழைக் கப்படுவர்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 16:15-16

சேசுநாதர் அவர்களைப் பார்த்து: நீங்களோ, என்னை யாரென்கிறீர்கள் என்று கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழி யாக நீர் கிறீஸ்துவானவர், சுயஞ்சீவிய சர்வேசுரனுடைய குமாரன் என்றார். (அரு. 6:70.)

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 24:44

அப்படியே நீங்களும் மனுமகன் எந்நேரம் வருவாரென்று அறியாததி னாலே ஆயத்தமாயிருங்கள்.

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 2:11

அதேதெனில்: இன்று தாவீதின் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார்.